**பவானி நகராட்சி 31.07.2023-ம் தேதி திங்கட்கிழமை நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்**

**பொருள் எண்:1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீன் 2023ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிடப்பட்டது.

**மன்றத்தீர்மான எண் : 40** பார்வையிடப்பட்டது

**பொருள் எண்:2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2023ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிடப்பட்டது.

**மன்றத்தீர்மான எண் : 41** பார்வையிடப்பட்டது

**பொருள் எண்: 3**

அரசாணை (நிலை) எண் 98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 13.07.2023-ன்படி ஜூலை 2023 மாதம் முதல் நகர்மன்ற தலைவருக்கு ரூ.15,000/- நகர்மன்ற துணைத் தலைவருக்கு ரூ.10,000/- மற்றும் நகர் மன்ற உறுப்பினர்களுக்கு ரூ.5,000/-மதிப்பூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**மன்றத்தீர்மான எண் : 42** பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**(ந.க.எண் 938/2022/பி1)**

**பொருள் எண்: 4**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**மன்றத்தீர்மான எண் : 43** பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**(ந.க.எண்.937/2023/சி1)**

**பொருள் எண்: 5**

தமிழ்நாடு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் அரசாணை (நிலை) எண் 15 சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை நாள் 10.07.2023-ன்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ந.க.எண் 2514/2023/பி1 நாள் 14.07.2023 –ம் தேதிய கடிதத்தில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி ஆணையர்கள் மற்றும் இதர துறை சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கு விண்ணப்பதிவு இடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருதல் என பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி பவானி நகரில் நடைபெறும் விண்ணப்பதிவு இடங்களில் அடிப்படை வசதிகள் செய்திட ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.3.00 (ரூபாய் மூன்று இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 44</u>** மன்றம் அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண் 1029/2023/சி1)**

**பொருள் எண்: 6**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடித ந.கஎண் 399/2023/A2 நாள் 06.07.2023-ன்படி 2023-2024-ம் ஆண்டிற்கான வருடாந்திர பங்களிப்புத் தொகை ரூ.30,000/-யை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2023-2024 ஆண்டிற்கான பங்களிப்புத் தொகை ரூ.30,000/-யை கோயமுத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு பொதுநிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பங்களிப்புத் தொகை ரூ.30,000/-யை பொது நிதியிலிருந்து மேற் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மானஎண் : 45</u>** தொகையினை செலுத்த மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.937/2023/சி1)**

**பொருள் எண்: 7**

பவானி நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி குடிநீர் மற்றும் கல்வி நிதி கணக்குகளுக்கு இயல்பு நிலை கணக்கு மற்றும் UTS மென்பொருள் மூலம் தயார் செய்ய வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட கணக்குகளை தனியாரை கொண்டு தயார் செய்யவும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 46</u>** தொகையினை பொதுநிதியிலிருந்து செலுத்த அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண்482/2016/பி1)**

**பொருள் எண்: 8**

பவானி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகளும் மின்தடையின் போது இயங்க கடந்த 10 வருடங்களாக பயன்பட்டு வந்த 5 KVA UPS பழுதடைந்து தற்போது செயலிழந்துள்ளது. எனவே அலுவலக பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகள், மின் விளக்குகள் மற்றும் மின் விசிரிகள் மின்தடையின் போது தடையில்லாமல் இயங்குவதற்கு அவசர அவசியம் கருதி புதிய 10 KVA UPS கொள்முதல் செய்து பொருத்த உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 47</u>** மன்றம் அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண்928/2023/இ1)**

**பொருள் எண்: 9**

பவானி நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு குடிநீர் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் மூன்று பணியாளர்கள் ஏற்பாடு செய்தல் மதிப்பீடு ரூ. 1.80 லட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 37 நாள் 30.06.2023யில் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 19.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s GSC Technologies and Services, 39 D-D RT Complex, Pallipalayam Road, Komarapalayam 638 183 | **ரூ.1.80** | மதிப்பீட்டு விலை விகிதம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | Thiru.S.Balasubramaniyan, Contractor, Bhavani, Erode 638 301 | | 0.39% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்றதப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s GSC Technologies and Services, Komarapalayam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று பணி ஆணை வழங்கலாம்

<u>**மன்றத்தீர்மான எண்** : 48</u> அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண் 419/2023/E1)**

**பொருள் எண்: 10**

பவானி நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் பணி ஆய்வர் ஒப்பந்த அடிப்படையில் ஏற்பாடு செய்தல் மதிப்பீடு ரூ.2.15 லட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 38 நாள் 30.06.2023யில் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 19.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s GSC Technologies and Services, 39 D-D RT Complex, Pallipalayam Road, Komarapalayam 638 183 | ரூ.2.15 | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | Thiru.S.Balasubramaniyan, Contractor, Bhavani, Erode 638 301 | | 0.38% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்றதப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s GSC Technologies and Services, Komarapalayam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று பணி ஆணை வழங்கலாம்

<u>**மன்றத்தீர்மான எண்** : 49</u> மன்றம் அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண் 424/2023/E1)**

**பொருள் எண்: 11**

பவானி நகராட்சி மேட்டூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு சுற்று சுவர் அமைத்தல் பணி, மதிப்பீடு ரூ4.00 லட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 34 நாள் 30.06.2023யில் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 19.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | Thiru.S.Balasubramaniyan, Contractor, Bhavani, Erode 638 301 | ரூ.4.00 | 0.09% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/S.RGC Construction Kolathur, Chennai | | 1.00% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0,09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.S.Balasubramaniyan, Contractor, Bhavani அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று பணி ஆணை வழங்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 50</u>** மன்றம் அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண் 848/2023/E1)**

**பொருள் எண்: 12**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மினிபவர் பம்புகள் மற்றும் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பொருத்தப்பட்டுள்ள ஏர்கம்பசர்கள் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, 2023-24ம் நிதியாண்டிற்கு இரண்டாம் காலாண்டு (ஜீலை முதல் செப்டம்பர் வரை), பராமரிப்பு பணிக்கு ரூ.4.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 51</u>** குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண்.926/2023/இ1)**

**பொருள் எண்: 13**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 14000/2021/இ1 நாள் 09.09.2021-ல்Hon'ble Minister Budget Announcement 2021 - 2022 நகராட்சி பகுதிகளில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்க அறிவிப்புகள் வழங்கப்பட்டது. அதன்படி 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் மொத்தம் 86 எண்ணிக்கை தெரு விளக்குகள் ரூ.4.71 இலட்சம் மதிப்பீட்டில் பொருத்தி கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள 69 எண்ணிக்கை மின் கம்பங்களில் புதியதாக 20 வாட்ஸ் LED விளக்கும், ஏற்கனவே உள்ள 17 எண்ணிக்கை மின் கம்பங்களில் புதியதாக மின் கம்பிகள் அமைத்து 20 வாட்ஸ் LED தெரு விளக்குகள் பட்டியலில் உள்ள இடங்களில் பொருத்த மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மான எண் : 52</u>** மன்றம் அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண்.1399/2021/இ1)**

**பொருள் எண்: 14**

பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் இருந்து வந்த தற்பொழுது பயன்பாட்டில் இல்லாத/ பயன்படுத்த முடியாத வாகனங்களின் உதிரிபாகங்கள், தளவாடங்கள், தள்ளுவண்டிகள், குப்பைத்தொட்டிகள் மற்றும் இதர இரும்பு மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் போன்ற பொருட்களை கணக்கெடுக்கப்பட்டது. தள்ளுவண்டி 32, குப்பைத் தொட்டிகள் 40, டிரை சைக்கிள் 1, பேட்டரியால் இயங்கும் வாகனம் 4, வாகன பழைய பொருட்கள் உள்ளன. இப்பொருட்களை கழிவுகள் நீக்கம் செய்வதால் தேவைபடாத பொருட்கள் மேலும் சேதமடைவது தவிர்க்கப்படும். மழைநீர் தேங்கி கொசுக்கள் பெருகி டெங்கு, சிக்குங்குனியா, போன்ற தொற்றுநோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும். கழிவுபொருட்கள் அகற்றப்படுவதால் நகரின் தூய்மை பேணிகாக்கப்படும். மேலும் அரசு கூடுதல் செயலர் அவர்களின் 07.05.2023 அன்று ஆய்வின் போது உடனடியாக தேவையில்லாத பழைய பொருட்களை அப்புறப்படுத்தி நகர் பகுதியை தூய்மையாக வைக்க

அறிவுறுத்தப்பட்டது. இதன்படி உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகளிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | விலை 1 கிலோ(ரூ) |
|---|---|---|---|
| 1 | கே.பெரியசாமி ஸ்டீல்ஸ் காளிங்கராயன் பாளையம் | இரும்பு பொருட்கள் | 27 |
| | | தகரம் | 24 |
| | | பிளாஸ்டிக் | 20 |
| 2 | பி.எஸ்.பழனிச்சாமி, பவானி | இரும்பு பொருட்கள் | 27 |
| | | தகரம் | 18 |
| | | பிளாஸ்டிக் | 20 |
| 3 | ஆனந்தன், பவானி | இரும்பு பொருட்கள் | 22 |
| | | தகரம் | 18 |
| | | பிளாஸ்டிக் | 10 |

வரிசை எண் 1ல் கே.பெரியசாமி காளிங்கராயன் பாளையம் அவர்களி ன் விலைப்புள்ளி ஏற்று பணியாணை வழங்கி பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 53</u>** மன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, மன்றம் விலைப்புள்ளி அக்டோபர் 2023 ஆயுதபூஜை வரையில் தள்ளி வைக்கப்பட்டது. ஆயுதபூஜைக்கு பின்பு விலைப்புள்ளி கோரலாம். **(ந.க.எண்.1033/2023/எச்1)**

(ஒம்).E.சிந்தூரி.
தலைவர்,
பவானி நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்
பவானி நகராட்சி.